**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.120/2024**
**PW3**

| | | |
|---|---|---|
| Name | : | சாரங்கபாணி |
| Father's Name | : | ஏழுமலை |
| Village | : | மேல்குண்ணுமுறிஞ்சி |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.07.2025.

Accused present.

**முதல் விசாரணை**

நான் மேல்குண்ணுமுறிஞ்சி கிராமத்தில் குடியிருந்து ஜோதி பூ மார்கெட்டில் வேலை செய்து வருகிறேன் . ஆஜர் எதிரியை தெரியும் . அவரை என் சித்தப்பா பெரியசாமியுடன் பார்த்துள்ளேன் . கடந்த 25.09.2023 அன்று கீக்கலூரில் ஒரு உறவினரின் இறப்பிற்கு நான் , என் சித்தப்பா பெரியசாமி, சுந்தரசாமி ஆகியோர் இருசக்கர வாகனத்தில் காலை 10 மணிக்கு சென்றோம். அலுவல் முடித்து விட்டு அங்கிருந்து புறப்பட்டு மாலை 4 மணிக்கு ஆர்ப்பாக்கம் கூட்ரோடு அருகே வந்துகொண்டிருந்தபோது எதிரி திருவண்ணாமலை திசையில் இருந்து எதிரி தனது இருசக்கர வாகனத்தில் வந்தார். அந்த இடத்தில் என் சித்தப்பாவை பார்த்து " தெவிடியா பையா " என்று திட்டினார். என் சித்தப்பா" ஏன்டா திட்டுற" என்று கேட்டார். அதற்கு எதிரி அங்கிருந்த ஒரு கல்லை எடுத்து என் சித்தப்பா மண்டையில் அடித்தார். கேட்கபோன என்னை எதிரி தன் இடுப்பில் இருந்த ஒரு கத்தியை

எடுத்து என் வயிற்றில் குத்தினார். பின்னர் என் இடது பக்க அக்குளிலும் குத்தினார். நான் மயக்கமடைந்தேன். என்னையும் என் சித்தபாவையும் சுந்தரசாமி இருசக்கர வாகனத்தில் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார் . அங்கு மருத்துவர்கள் எனக்கு சிகிச்சை அளித்தார்கள். எனக்கு ஆபராஷன் நடந்தது. போலிசார் என்னை வந்து மருத்துவமனையில் விசாரித்தார்கள் . என்னை தாக்க பயன்படுத்திய ஆயுதத்தை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். அது ஒரு பட்டன் கத்தியை போன்றதாகும். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவதுதான் அந்த கத்தி(ஏற்கனவே அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ). இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்தை சொன்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B. C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.